**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR.**

C.C. No. 33/2022

Prosecution

Deposition of Witness for Defence PW - 1

Court

| | | |
|---|---|---|
| Name | : | சிவசுப்பிரமணி |
| Father / Husband Name | : | மாரியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions Act. X of 1969 on the day of 28.02.2023

**1,3,4 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி இறந்து விட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் புஞ்சைதோட்டக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன் . நான் சம்பவ காலத்தில் சேரன் பொறியியல் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றி வந்தேன். தற்போது தஞ்சை அரசு பொறியியல் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகளான சக்திவேல்,

**Sd/- R.Sujatha,**

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC),கரூர்.**

செல்வம் மற்றும் பழனியம்மாள் ஆகியோர்களை எனக்கு தெரியும் . எதிரி மணிகண்டன் தற்போது உயிருடன் இல்லை.

2) தோட்டக்குறிச்சி கிராமத்தில் எனக்கு சொந்தமான விவசாய நிலம் உள்ளது . எனது விவசாய நிலத்திற்கு அருகில் சக்திவேலின் விவசாய நிலம் உள்ளது. பாசன கவுறு பிரிப்பது சம்பந்தமாக எனக்கும், சக்திவேலுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது. கடந்த 06.07.2015 ம் தேதி மதியம் 1 மணி போல் சக்திவேல், மணிகண்டன், செல்வம், பழனியம்மாள் ஆகியோர் ஜேசிபி மூலமாக எனது விவசாய நிலத்தில் தண்ணீர் பாய்ப்பதற்காக குழி எடுத்தார்கள் . அப்போது அதை பார்த்த எனது அக்கா சிவகாமி அவர்களை தடுத்துள்ளார். அவர்கள் குழி பறித்ததை எனக்கு தகவல் சொன்னார்கள்.

3) மறுநாள் 07.07.2015 ம்தேதி மாலை 6, 6.30 மணிபோல் நான் கல்லூரியில் பணிமுடிந்து வீட்டிற்கு வருவதற்காக மல்லாண்டவர் கோவில் அருகே வந்து கொண்டிருந்தேன். அப்போது சக்திவேல், மணிகண்டன், செல்வம், பழனியம்மாள் ஆகியோர் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். நான் சக்திவேலிடம் என்னுடைய நிலத்தில் குழி எடுக்கீறிர்கள் என்று கேட்டேன் . அதற்கு மணிகண்டன்என்னை பார்த்து தேவடியா மவனே என்று கெட்ட வார்த்தை பேசி , எனது சட்டையை பிடித்து கிழித்து விட்டார் . அப்போது சக்திவேல் என்பவர் அப்படித்தான் குழி எடுப்பேன் தேவடியா மவனே என்று கூறி கையில் வைத்திருந்த கடப்பாறையால் எனது முன்னந்தலையில் அடித்து விட்டார்.

4) எதிரி செல்வம் கம்பியால் எனது வலதுகை மணிகட்டிலும் , முதுகிலும் அடித்துவிட்டார். சண்டை நடந்து கொண்டிருந்தபோது எனது சகோதரிகளான சிவகாமியும், உமாராணியும் வந்து விட்டார்கள். அப்போது சிவகாமியை பார்த்து எதிரி சக்திவேல் , நீ என்ன உன் தம்பிக்கு சப்போர்ட்டா தேவடியா என்று தகாத வார்த்தை பேசி இடது கையில் கடப்பாறை கம்பியால் அடித்துவிட்டார். எனது

**Sd/-R.Sujatha,**

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC),கரூர்.**

மற்றொரு அக்கா உமாராணி தடுத்தபோது எதிரி மணிகண்டன் அவர் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் முன்தலையில் அடித்துவிட்டார் . எதிரி பழனியம்மாள் என்பவர் தேவடியா நீங்களும் சப்போர்ட்டா என்று கேட்டு எதிரி செல்வத்திடம் இரும்பு கம்பியை வாங்கி வலது மணிக்கட்டில் அடித்துவிட்டார்.

5) சம்பவத்தை நிறைய நபர்கள் பார்த்து கொண்டிருந்தார்கள். எனக்கு மிகுந்த அவமானமாக இருந்தது. எதிரிகள் கம்பி, கடப்பாறை காட்டி , அடித்து கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். அதனால் எனக்கு உயிர்பயம் ஏற்பட்டது. எனது மாமா நடேசன் மற்றும் அத்தை அங்கு வந்து சத்தம் போட்டார்கள் . அவர்கள் கம்பிகளை போட்டுவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள் . நானும், எனது அக்கா இருவரும் ஆம்புலன்ஸ் மூலம் அமராவதி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். நாங்கள் சிகிச்சையில் இருந்தபோது வேலாயுதம்பாளையம் போலிசார் அங்கு வந்து எங்களிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் . **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது.** எனது அக்கா சிவகாமிக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் மேல்சிகிச்சைக்காக கோவை பிளஸ்ஜி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம் . அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

6) என்னிடம் காட்டப்படும் கடப்பாறை கம்பி , மற்றும் இரும்பு கம்பிகளால் தான் எதிரிகள் என்னையும் , எனது சகோதரிகளையும் தாக்கினார்கள். **கடப்பாறை கம்பி, அ.சா.பொ. 1 ஆக குறியிடப்படுகிறது. இரும்புகம்பிகள் இரண்டு அ.சா.பொ.2 ஆக குறியிடப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**Sd/-R.Sujatha**,

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC),கரூர்.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/-R.Sujatha**,

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC),கரூர்.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR.**

C.C. No. 33/2022

Prosecution

Deposition of Witness for Defence PW - 2

Court

Name : சிவகாமி

Father / Husband Name : மாரியப்பன்

Village :

Taluk :

District :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the Provisions Act. X of 1969 on the day of 28.02.2023

**1,3,4 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி இறந்து விட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் புஞ்சைதோட்டக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன் . நான் சம்பவ காலத்தில் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வந்தேன் . தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 சிவசுப்பிரமணி எனது தம்பி ஆவார் . ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகளான சக்திவேல், செல்வம் மற்றும் பழனியம்மாள்

**Sd/-R.Sujatha,**

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC),கரூர்.**

ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரி மணிகண்டன் தற்போது உயிருடன் இல்லை.

2) தோட்டக்குறிச்சி கிராமத்தில் எனது தம்பிக்கு சொந்தமான விவசாய நிலம் உள்ளது . அந்த விவசாய நிலத்திற்கு அருகில் சக்திவேலின் விவசாய நிலம் உள்ளது . பாசன கவுறு பிரிப்பது சம்பந்தமாக எனது தம்பிக்கும் , சக்திவேலுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது . கடந்த 06.07.2015 ம் தேதி மதியம் 1 மணி போல் சக்திவேல், மணிகண்டன், செல்வம், பழனியம்மாள் ஆகியோர் ஜேசிபி மூலமாக எனது தம்பி விவசாய நிலத்தில் தண்ணீர் பாய்ப்பதற்காக குழி எடுத்தார்கள் . அப்போது அதை பார்த்த நான் அவர்களை தடுத்தேன் . எனது தம்பிக்க போன் மூலம் அவர்கள் குழி பறித்ததை தகவல் சொன்னேன்.

3) மறுநாள் 07.07.2015 ம்தேதி மாலை 6, 6.30 மணிபோல் எனது தம்பி கல்லூரியில் பணிமுடிந்து வீட்டிற்கு வருவதற்காக மல்லாண்டவர் கோவில் அருகே வந்து கொண்டிருந்தார். அப்போது மணிகண்டன் எனது தம்பியை தேவடியாபயலே என்று அசிங்கமான வார்த்தை பேசி , சட்டையை பிடித்து கிழித்துவிட்டார் . சக்திவேல், எனது தம்பியிடம் அப்படிதான் குழி பறிப்பேன் என்று கூறி அவர் கையில் வைத்திருந்த கடப்பாறை கம்பியால் முன் தலையில் அடித்துவிட்டார்.

4) எதிரி செல்வம் இரும்பு கம்பியால் எனது தம்பியின் வலதுகை மணிகட்டிலும் , முதுகிலும் அடித்துவிட்டார் . சண்டை நடந்து கொண்டிருந்தபோது நானும் , எனது மற்றொரு சகோதரி உமாராணியும் வந்து விட்டோம் . அப்போது என்னை பார்த்து எதிரி சக்திவேல் , நீ என்ன உன் தம்பிக்கு சப்போர்ட்டா தேவடியா என்று தகாத வார்த்தை பேசி எனது இடது கையில் கடப்பாறை கம்பியால் அடித்துவிட்டார் . அதில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது . எதிரிகள் மணிகண்டனும் , பழனியம்மாளும் இரும்பு கம்பிகளால் அவருடைய தலையிலும், வலது மணிக்கட்டிலும் அடித்துவிட்டார்கள். எதிரிகள் செல்வம், சக்திவேல், பழனியம்மாள் ஆகியோர் கம்பிகள் மற்றும் கடப்பாறை காண்பித்து எங்களை கொல்லாமல் விடமாட்டோம் தேவடியா என்று கூறினார்கள்.

**Sd/-R.Sujatha,**

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC),கரூர்.**

5) பயந்து போன எங்களை எனது மாமா நடேசன் மற்றும் அத்தை அங்கு ஆகியோர்கள் ஆம்புலன்ஸ் மூலம் அமராவதி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். 08.07.2015 ம் தேதியன்று நானும் , எனது தம்பியும் , எனது அக்காவும் சிகிச்சையில இருந்தபோது வேலாயுதமபாளையம் போலிசார் எனது தம்பியிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் எனது அக்கா உமாராணி , எனது தம்பி மற்றும் நானும் கையெழுத்து செய்தோம். புகார் வாக்குமூலத்தில் உள்ள எனது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. **பின்னர் எனக்கு** இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் மேல்சிகிச்சைக்காக கோவை பிஎஸ்ஜி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். எலும்பு முறிவுக்காக அறுவை சிகிச்சை செய்து கொண்டேன் . என்னிடம் காட்டப்படும் சா .பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவைகளின் மூலமாகத்தான் என்னையும், எனது தம்பி மற்றும் அக்காவை எதிரிகள் அடித்து தாக்கினார்கள் . வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/-R.Sujatha,**

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC),**

**கரூர்.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR.**

C.C. No. 33/2022

Prosecution

Deposition of Witness for Defence PW - 3

Court

| | | |
|---|---|---|
| Name | : | உமாராணி |
| Father / Husband Name | : | முனியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions Act. X of 1969 on the day of 28.02.2023

**1,3,4 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி இறந்து விட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தாந்தோணிமலையில் குடியிருந்து வருகிறேன். நான் உழவர் சந்தையில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி , அ.சா.2 எனது தங்கை ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகளான சக்திவேல், செல்வம் மற்றும் பழனியம்மாள் ஆகியோர்களை எனக்கு தெரியும்.

**Sd/-R.Sujatha**,

நீதித்துறை நடுவர்**,**

கூடுதல் மகளிர் நீதிமன்றம்**(FAC),**கரூர்**.**

எதிரி மணிகண்டன் தற்போது உயிருடன் இல்லை.

2) தோட்டக்குறிச்சி கிராமத்தில் எனது தம்பிக்கு சொந்தமான விவசாய நிலம் உள்ளது . அந்த விவசாய நிலத்திற்கு அருகில் சக்திவேலின் விவசாய நிலம் உள்ளது. பாசன கவுறு பிரிப்பது சம்பந்தமாக எனது தம்பிக்கும் , சக்திவேலுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது. கடந்த 06.07.2015 ம் தேதி மதியம் 1.30 மணி போல் எனது தங்கை சிவகாமிக்கும் , சக்திவேலுக்கும், தகராறு ஏற்பட்டது . சக்திவேல்,தண்ணீர் வாய்க்கால் பறித்ததால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது . எனது தம்பிக்கு எனது தங்கை தகவல் சொன்னார்.

3) மறுநாள் 07.07.2015 ம்தேதி மாலை 5, 5.30 மணிபோல் எனது தம்பி கல்லூரியில் பணிமுடிந்து வீட்டிற்கு வருவதற்காக மல்லாண்டவர் கோவில் அருகே வந்து கொண்டிருந்தார் . அப்போது கடப்பாறை கம்பியால் சக்திவேல் தலையில் அடித்து விட்டார் . செல்வம் இரும்பு கம்பியால் எனது தம்பியின் வலதுகை மணிகட்டிலும் , முதுகிலும் அடித்துவிட்டார் . சத்தம் கேட்டு நானும் , எனது தங்கையும் அந்த இடத்திற்கு சென்றோம. நாங்கள் வந்தவுடன் நீங்கள் என்ன உன் தம்பிக்கு சப்போர்ட்டா தேவடியா என்று தகாத வார்த்தைகளால் பேசினார்கள். நான் தடுக்க சென்றபோது மணிகண்டன் கம்பியால் எனது தலையில் அடித்துவிட்டார். பழனியம்மாள் செல்வம் வைத்திருந்த கம்பியை பிடித்து எனது வலது கையில் அடித்துவிட்டார் . பழனியம்மாள் எனது தங்கையை அடித்துவிட்டார்.

4) எனது மாமாவும், மற்றும் அத்தை அங்குவந்தார்கள். காயம்பட்ட எங்களை ஆம்புலன்ஸ் மூலம் அமராவதி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நாங்கள் சிகிச்சையில் 08.07.2015 ம் தேதியன்று இருந்தபோது வேலாயுதமபாளையம் போலிசார் எனது தம்பியிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் எனது சகோதரி

**Sd/-R.Sujatha**,

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(**FAC**),கரூர்.

சிவகாமி, எனது தம்பி மற்றும் நானும் கையெழுத்து செய்தோம் . புகார் வாக்குமூலத்தில் உள்ள எனது சாட்சி கையெழுத்து அ .சா.ஆ.3 ஆக குறியிடப்படுகிறது. பின்னர் எனது தங்கையை மேல்சிகிச்சைக்காக கோவையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவைகளின் மூலமாகத்தான் என்னையும், எனது தம்பி மற்றும் எனது தங்கையையும் எதிரிகள் அடித்து தாக்கினார்கள் . வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/-R.Sujatha**,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்**(FAC),**
கரூர்.